1971 அக்டோபர் 21]

எந்தெந்த இடங்களில் மண் பரிசோதனை செய்ய வேண்டுமோ அந்த இடங்களுக்கு அந்த ஊர்தியை அனுப்பி பரிசோதனை செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஏ. வகாப் : இந்த மண்வளப் பரிசோதனை நிலையம் பட்டுக்கோட்டையில் அமைக்கப்பட இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்தின் வட பகுதியில் அப்படிப்பட்ட பரிசோதனை நிலையம் இல்லாத காரணத்தால் இராணிப்பேட்டையில் உள்ள நவ்லாக்கில் பரிசோதனை நிலையத்தை அமைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நல்லாக் பண்ணையை சமீபத்தில்தான் கனம் அங்கத்தினர் அவர்களோடு நான் பார்வையிட்டேன். அங்கு இன்னும் செய்யவேண்டிய வேலைகள் நிறைய இருக்கின்றன. அவை முடிந்த உடன் இதைப்பற்றியும் கவனிக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : There is a great demand for good and adequate vegetables everywhere in our State and other States also. Hosur and Danganicotah taluks in Dharmapuri district have ideal conditions for growing European as well as Indian vegetables. May I know from the Hon. Minister whether he will formulate a scheme for growing of vegetables in those areas?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, காய்கறி பற்றித் தனிக் கேள்வி போடப்பட்டிருக்கிறது. அப்போது இதைப் பற்றிச் சொல்லுகிறேன்.

திரு. ஏ. எம். இராஜா : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது மத்திய அரசு இரண்டு இயங்கும் ஊர்திகளை அனுப்பி இருக்கிறது என்று சொன்னார்கள். அதிலே ஒன்றை கோவை மாவட்டத்திற்கு அளிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கனம் அங்கத்தினர் அவர்கள் ஏதாவது உறுதிமொழியை எதிர்பார்க்கிறார் என்று கருதுகிறேன். எந்தெந்த இடங்களுக்கு உடனடியாக அப்படிப்பட்ட பரிசோதனைகள் செய்யப்பட வேண்டுமோ அப்படிப்பட்ட இடங்களுக்கு அலுவலாளர்களோடு கலந்து பேசி ஆங்காங்கு ஊர்தியை அனுப்ப ஏற்பாடு செய்யப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் காய்கறிகள் பயிரிடுதல்

* 14. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் காய்கறிகள் பயிரிடுவதை அபிவிருத்தி செய்யும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : காய்கறி மேம்பாட்டுத் திட்டம் தஞ்சாவூர் மாவட்டம் உட்பட தமிழ்நாடு முழுவதும் 1963-ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத் திட்டம் தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சாவூர், திருவையாறு, கும்ப கோணம், பாபநாசம், வலங்கைமான், திருப்பனந்தாள், மன்னார் குடி, கோட்டூர், நாகப்பட்டிணம் ஆகிய வட்டாரங்கல் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

Ghero by Farm Workers in Coimbatore district

*15 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether Farm Workers had gheroed Power Board officials in Coimbatore district about 12th May 1970 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை@ சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : விவர அறிக்கையிலே பார்த்தால் நான்கு முக்கியமான சென்டர்களிலே ஏற்கனவே கனெக்ஷன் இருந்து டிஸ்கனெக்ஷன் செய்யப்பட்டு, ஏ. இ. அவர்களை வற்புறுத் தியதன் காரணமாக ஏ. இ. கனெக்ஷன் கொடுத்த காரணத்தால் அந்தக் கூட்டம் கலைந்திருக்கிறது. ஆகவே, இந்த மாதிரி அதிக மான அதிகாரம் தலைவராக இருக்கும் ஏ.இ. க்குக் கொடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பரிசீலனை செய்யலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்--விடைகள் முடிவுற் றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. அமைச்சரின் விளக்க அறிக்கை துணை வினாவிற்கு அளித்த வினாவை விளக்கி அளித்த அறிக்கை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. மொய்தீன் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் அளித்த விடை சுருக்கமாக இருந்த காரணத்தால் அவர்களுடைய மனது புண் பட்டு தவறான கருத்தை வெளிப்படுத்துவதாக நான் அறிந்து வருந்துகிறேன். அவர்கள், " தகுதியை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ? " என்று கேட்டார்கள். நான், அந்தத் தகுதி, மாணவர்களை ஆராய்கிற, சோதிக்கிற உறுப்பினர்களாக அமைகிற வர்கள், போர்டு மெம்பர்கள் தகுதியைப் பொறுத்து இருக்கிற சா

@ 100-103-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.